# அரசியல் நெடும்பயணத்தில் தலைவரான கலைஞர்!

**(27.7.1969 கலைஞர் தலைவராகப் பொறுப்பேற்ற நாள்)**



“...ஒன்றை மட்டும் இங்கே நான் தெளிவாகப் பதிய வைப்பது என் கடமையாகும். நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும், அண்ணா அவர்களின் நினைவே எனக்கு ஊன்றுகோலாகத் துணை புரிகிறது. அவருடைய இதயத்தை இரவலாகப் பெற்றுக் கொண்ட உணர்வோடு தான் நான் ஒவ்வொரு கணமும் நடை போடுகிறேன். /அப்போது நான் குறிப்பிட்டுள்ளபடி இனி இருப்பது நீடித்த பயணமோ, குறுகிய காலப் பயணமோ எனக்குத் தெரியாது! அது பற்றிய கவலையும் இல்லை!

நடைதள்ளாடலாம் தடைபடலாம் முடிவுற்றுப் போய்விடலாம்! ஆனால், நான் பெற்றுள்ள அந்த உணர்வுகளுக்குத் தள்ளாட்டமில்லை! முடிவே இல்லை! இல்லவே இல்லை!..”

(நெஞ்சுக்கு நீதி இரண்டாம் பாகம்)

1969 ஜூலை 27! இந்நாள் கழக வரலாற்றில் பொன்னாள்! ஆம்; கலைஞர் அவர்கள் தி.மு.கழகத்தின் சுமையைத் தன் தோளில் சுமத்தப்பட்டுத் தலைவராகப் பொறுப்பேற்ற நன்னாள்! தொடர்ந்து 50 ஆண்டுகள் தம் வாழ்நாள் முழுமைக்கும் தலைமைப் பொறுப்பிலிருந்து, “காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது” என உயிர்க்கு நிகரான கடமையாகக் கருதிக் கழகத்தை வழி நடத்திச் சென்றுள்ளார்.

அண்ணா மறைவுக்குப்பிறகு, கலைஞர் முதல்வரானதும் தலைவரானதும் எப்படி என்று வரலாற்றுச் செய்திகளை நாம் மறந்துவிட முடியாது.

சற்றொப்ப 56 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில் (27.7.1969) கலைஞர் தி.மு.க.வில் தலைவர் பொறுப்பை ஏற்றார்.

1969 பிப்ரவரி, 3 ஆம் நாள் நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றார். அந்நேரத்தில் தி.மு.கழகம் முதன் முதலில் வெற்றி பெற்று அண்ணா அவர்கள் தலைமையில் ஒன்றரை ஆண்டுகளை நிறைவு செய்திருந்த நேரம். தமிழகத்தில் ஏற்பட்டிருந்த புற்றுநோயை நீக்கப் பாடுபட்ட அண்ணா, தனது இதயத்தில் ஏற்பட்டிருந்த புற்றுநோயை அகற்ற மறந்திருந்தார். அதனால், தமிழகம் கண்ணீர்க் கடலில் மிதந்தது.

இந்தத் துயரச் சூழலில்தான் ஆட்சியையும், கட்சியையும் காப்பாற்றப்பட வேண்டிய கடப்பாடு இருந்தது. யார் முதல்வர்? என்ற கேள்வி எழுந்த நிலையில், கழகத் தோழர்கள், பொதுமக்கள், அரசியல் நோக்கர்கள், பத்திரிகையாளர்கள் என எல்லாருடைய மத்தியிலும் எதிர்பார்ப்புகள் மேலோங்கி நின்றன.

நாவலர் நெடுஞ்செழியனா? கலைஞரா? என்ற வினாவிற்கு விடையளிக்கும் வகையில், கலைஞரே முதல்வராக்கப்பட்டார். இதுபற்றி அன்றைய கழகப் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர் அவர்களே ஒரு பொதுக்கூட்டத்தில் மனந்திறந்து பேசினார்.

அதுமட்டுமல்ல; தந்தை பெரியாரின் பெருவிருப்பமும் அதுவே. அதுபற்றி ‘ஜூனியர் விகடன்” (23.12.1992) இதழில், முன்னாள் அமைச்சர் க. இராசாராம் தனது தகவல்களைப் பதிவு செய்து இருக்கிறார்.

கலைஞர் முதலமைச்சரானதும் தலைவரானதும், குறித்து திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டத்தில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே தந்த வாக்குமூலங்கள், பேசிய முக்கிய பகுதிகள்

“நான் 1944ஆம் ஆண்டில் கழகத்தில் அடியெடுத்து வைத்த நாளிலிருந்து இதுவரை எதற்கும் இடையூறாக இருந்தவன் அல்ல, கட்டுப்பாட்டை ஒருபோதும் மீறியவன் அல்ல.

ஆனால், அண்ணா அவர்கள் மறைந்த பின்னர் ஒரு நிலைமை மாற்றம் வரும் என்று தெரிந்தவுடனேயே அந்த முயற்சிக்கு இடையூறாக இல்லாமல் மாறுபட்ட எண்ணத்திற்கு இடம் தராமல் ஒதுங்கிக் கொண்டேன்.

சகஜமான நிலையில்தான் தி.மு.க. சட்டமன்றத் தலைவர் தேர்தலும் நடைபெற்றது.

எனக்கோ, கலைஞர் கருணாநிதிக்கோ எள்ளளவும் ஒரு சிறிய கருத்து வேறுபாடும் இல்லை. இன்றைக்கும் இல்லை.



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

என்னுடைய முழு மதிப்பிற்குரிய தலைமையில்தான் கலைஞர் அவர்கள் இருந்து வருகிறார்கள். தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்தல் நடந்தபோது, நாம் அறிஞர் அண்ணாவை இழந்து அழுத கண்ணீரைத் துடைக்க முடியாமல் இருந்தோம். அப்போது கலைஞர் கருணநிதியைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற யோசனை வந்தபோது, அவர் வருவதானால் ஏகமனதாக வரட்டும் என்று கூறினேன்.

நான் அமைச்சரவையில் அங்கம் வகிக்க முடியாத சில சங்கடங்களின் சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குரிய காரணங்களை நான் உள்ளத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, பத்திரிகைகளுக்கோ பொதுமக்களுக்கோ தெரிவிக்கவேண்டிய அவசிமில்லை; வேண்டுமானால் நாங்களே பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று நான் நினைத்தேன்.

67ல் அமைச்சரவை அமைக்கப்படும்போது பலர் அமைச்சரவையில் இடம் கேட்டார்கள், அப்போது நான் அண்ணாவிடம் நான் அமைச்சரவைக்கு வெளியே இருக்கிறேன், என்னைவிட்டு விடுங்கள், மற்றவர்களுக்குக்கூட நெடுஞ்செழியனுக்கே தரவில்லை என்று கூறிச் சமாதானப்படுத்தலாம் என்றேன். கலைஞர் கருணாநிதியும் அவ்விதமே என்னையும் விட்டுவிடுங்கள் என்று கூறினார். இதை அண்ணா அவர்கள் தி.மு.க. சட்டமன்றக் கட்சிக் கூட்டத்திலேயே கூறியிருக்கிறார். ஒரு போட்டி என்றால் சரியில்லை; ஐந்து பேர்தான் ஆதரிக்கிறார்கள் என்றாலும், அந்தப் பிளவு வளர்ந்து கட்சியில் சரிவு ஏற்படக்கூடாது. அண்ணாவுக்குப் பிறகு கட்சியை மேலும் வளர்க்க நம்மால் முடியாவிட்டாலும் அவர் வளர்த்திருந்த அளவுக்காவது வைத்திருக்க வேண்டும் என்ற காரணத்தால் நான் ஒதுங்கிக் கொண்டேன்.

நமக்கிருக்கும் கடமை எல்லாம் அண்ணா அவர்கள் அமைத்த அரசைத் தொடர்ந்து கட்டிக்காப்பதுதான்! கலைஞர் கருணாநிதியிடம் எனக்குத் தனிப்பட்ட முறையில் மதிப்பு உண்டு. கலைஞர் அவர்களின் அறிவையும், ஆற்றலையும், உழைப்பையும் நான் குறைத்து மதிப்பிடுபவன் அல்ல. கட்சிக்காக கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தவர் கலைஞர். எனக்குப்பேச எழுதத்தான் தெரியும். ஆனால், கலைஞர் அவர்களுக்குக் கதை எழுதத் தெரியும் நாடகம் எழுதத் தெரியும் கவிதை எழுதத் தெரியும் நடிப்பாற்றலும் உள்ளவர்.

ஒருமுறை கலைஞர் பிறந்த நாள் விழாவிற்காக, நான் கட்டுரை எழுதினேன். அறிவு ஆற்றலில் எழுத்து பேச்சு நடிப்பு சினிமா நாடகம் போன்ற துறைகளில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அடுத்தபடியாகக் கலைஞர்தான் என்று எழுதினேன். கலைஞர்கூட என்ன இப்படி எழுதிவிட்டீர்களே என்று கேட்டார்.

ஆகவே, அவருக்கும் எனக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு யாரும் எதையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை.

எதிர்க்கட்சிக்காரர்கள் என்னைப் பற்றி எழுதுகிறார்கள் என்றால் கட்சியின் மீதுள்ள நல்ல எண்ணத்திலா எழுதுகிறார்கள்? ஏதாவது பிளவு, சரிவு ஏற்படாதா என்று நினைத்து எழுதுகிறார்கள். அந்தப் பத்திரிகைகளைக்கூட நண்பர்கள் வாங்கக் கூடாது.

கலைஞர் கருணாநிதிக்கும் எனக்கும் நெருக்கம் அதிகம். வேறு சிலரைக் கண்டால்கூட நான் ஒதுங்குவேன். 25 ஆண்டுகளாக நானும் அவரும் ஒருமனதாகவே இருந்து வருகிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான் படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு இரண்டு ரூபாய் அனுப்பி என்னைப் பேச அழைத்தவரே கலைஞர் கருணாநிதிதான்.

நாமும் வெளியூர் சென்று பேசப் போகிறோம் என்று பெருமையுடன் ரயிலில் ஏறி நான் புறப்பட்டதே கலைஞர் கருணாநிதியால்தான். அத்தகையவருடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு இன்னும் மாறவில்லை.

கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கும்போது நான் போட்டி வேண்டாம் என்று ஒதுங்கினேன். அமைச்சரவையில் சேர்வது என்பது அவரவரின் தனிப்பட்ட விருப்பம்.

இப்படித்தான் நாவலர் அவர்கள் நடந்த உண்மைகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அண்ணா மறைந்தபின், கலைஞர் முதல்வரானது எப்படி என்பது பற்றி ஒரு தகவலை முதன்முறையாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஒரு மாநாட்டில் வெளியிட்டார்.

“தி.மு.க. மக்கள் கட்சி, இது தனி மனிதக் கட்சி அல்ல. அண்ணா அவர்களின் கழகத்தை உருவாக்கியவர்கள் கலைஞர் அவர்கள் இதனைக் கட்டிக்காத்து வருகிறார்கள்.

கழகத்தைப் பிளவுபடுத்தச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி நினைப்போரின் நினைப்புக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன், கழகத்தைப் பிளவுபடுத்த எவரும் பிறக்கவில்லை, இனிமேலும் பிறக்கப் போவதுமில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு முதலமைச்சர் பொறுப்புக்கு வருவது பற்றி நமது கலைஞர் அவர்கள் என்ன சொன்னார் என்று இதுவரை நான் எந்த மேடையிலும் சொல்லவில்லை. இங்கே அதைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

முதலமைச்சர் பொறுப்புக்கு நான் வர விரும்பவில்லை, எனக்கு வேண்டாம் என்றுதான் அவர் தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல, தம்பி மாறன் அவர்களையும் அனுப்பிவைத்து தனக்கு இந்தப் பதவி வேண்டாம் என்று தெரிவித்திடச் சொன்னார்.

கலைஞரின் துணைவியாரும் இதையே தெரிவித்தார். ஆனால் நாங்கள்தான் அதை மறுத்தோம். ஆகவே, கலைஞர் அவர்கள் இந்தப் பதவியை விரும்பியவரல்ல; வேண்டுமென்று கேட்கவுமில்லை. மக்களின் விருப்பத்தை நிறை வேற்றத்தான் அவர் முதலமைச்சர் ஆனார். நாங்கள் எல்லாம் சேர்ந்துதான் அந்தச் சுமையைச் (முதலமைச்சர் பொறுப்பு) சுமக்க வைத்தோம். அவர் படங்களுக்கு வசனமெழுதினால் பல ஆயிரங்களைச் சம்பாதிக்க முடியும், அதற்குக்கூட தேவையில்லாமல் இந்தச் சுமையை மக்களுக்காக அவர் ஏற்றிருக்கிறார்” என்று பேசினார் எம்.ஜி.ஆர்.

இவ்வாறெல்லாம் ஆதாரங்கள் இருக்க, அதற்கு மாறாக, தேர்தல் நேரக் கோமாளி வந்து விட்டேன் என்று சொல்வதைப்போல் உண்மைக்கு மாறான செய்திகளை எடப்பாடிகளும், ஓ.பி.எஸ்களும், அ.தி.மு.க. எடுபிடிகளும் உளறி வருகிறார்கள். ஆகவே, அண்ணாவிற்குப்பின், கலைஞர் முதல்வரானது மேற்குறிப்பிட்டவர்கள் தரும் தகவல்படி,

9.2.69 அன்று சட்டமன்ற தி.மு.க. கட்சி அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. சட்டமன்றக் கட்சித் தலைவர் எனப்படும் முதலமைச்சர் பொறுப்புக்கான தேர்தலுக்குத் தலைமை யேற்குமாறு அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களை து.ப. அழகமுத்து முன்மொழிந்து கவிஞர் வேழவேந்தன் வழிமொழிந்தார். வேட்பாளர் பெயர்களை முன்மொழியுமாறு கூட்டத் தலைவர் அறிவிக்கவே, கலைஞர் பெயரை அமைச்சர் மதியழகன் முன்மொழிந்திட, அமைச்சர் சத்தியவாணிமுத்து வழிமொழிந்திட்டார்.

அடுத்து, நாவலர் பெயரை சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜே. இராமசாமியும், வி.டி அண்ணாமலையும் முன்மொழிந்து வழிமொழிந்தனர். உடனே நாவலர் எழுந்து, முதலமைச்சர் பொறுப்புக்கான போட்டியிலிருந்துதான் விலகிக் கொள்வதாக அறிவித்தார். இதுதான் உண்மை வரலாறு. இதுதான் நடந்த செய்தி. இதனை நெஞ்சுக்கு நீதி நூலில் கலைஞர் பதிவும் செய்திருக்கிறார்.

இந்நிலையில் தந்தை பெரியார் பொதுச் செயலாளர் தேர்தல் பொறுப்பு குறித்துவிடுத்த அறிக்கையில் தி.மு.க கழகத்தின் பொதுச் செயலாளர் பதவி தான், கட்சியின் தலைமைப் பதவி. இந்த பதவிக்கு கருணாநிதி போட்டியிடப் போவதாக அறிவித்து விட்டார். ஆகவே, அவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்; கட்சியின் தலைமைப் பதவியும் ஆட்சியின் தலைமைப் பதவியும் ஒரு வர் கைகளில் இருந்தால் தான், எவ்விதத் தொல்லையும் இல்லாமல் எடுத்த காரியங்கள் நடக்கும் “ என்று கூறியிருந்தார்.

தி.க.விலிருந்து பிரிந்து தி.மு.க.வைத் தோற்றுவித்த போது, தலைவர் பொறுப்பு பெரியாருக்காக அண்ணா அவர்களால் வெற்றிடமாக அறிவிக்கப்பட்டு; பொதுச் செயலாளர், பொருளாளர் பொறுப்புகள் என இருந்து வந்தன. அண்ணாவின் மறைவிற்குப் பிறகு, பல்வேறு விவாதங்கள்மூலமாகக் கருத்துருக்கள் ஏற்படுத்தப்பட்டன. தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் எனப் பொறுப்புகள் உருவாக்கப்பட்டன.

1969 ஜூலை 26 அன்று காலை பழைய செயற்குழு, பொதுக்குழு சென்னை இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் கூடி நன்றி தெரிவித்தது. மறுநாள் ஜூலை 27 அன்று கழகச் சட்டத் திட்டத்திருத்தைப் பொதுக்குழு ஏற்றுக்கொண்டதன்படி, தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் தேர்தலும், குழுக்கள் தேர்தலும் நடைபெற்றன. இத்தேர்தலில் தலைவராகக் கலைஞர் அவர்களும், பொதுச் செயலாளராக நாவலரும், பொருளாளராக எம்.ஜி.ஆரும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புதிய பொதுக்குழு உறுப்பினர்கள் 326 பேர்களில், 320 பேர்கள் பங்கேற்று இந்தத் தேர்தல் நடைபெற்றது..

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் நகர் அண்ணா கலையரங்கில் திராவிட கழக மாநாட்டில் கலந்து கொண்டார் பெரியார். “ திமுகவிற்கு இதுவரை தலைவர் என்ற பொறுப்பு இல்லாமல் இருந்தது; ஆனால், இப்போது புதிய தலைவர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது; அதன் தலைவராகக் கலைஞர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்; இந்தத் தேர்தலில் தி.மு.க. உடைந்து விடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்; ஆனால், தேர்தல் நல்ல முறையில் நடந்திருக்கிறது; இதனால், என் கவலை தீர்ந்து விட்டது. இப்போதுள்ள நிலையில், தி.மு.க. ஆட்சியைத் தமிழர்கள் ஆதரித்தாக வேண்டும்; இது தவிர, தமிழர்களுக்கு நன்மை செய்யும் ஆட்சி இனி ஏற்பட்டு விடாது! ....” என்று மனமுவந்து, பெருமைப்படுத்திப் பேசினார் பெரியார்.

1969 ஜூலை 27 அன்று 4ஆவது பொதுக்குழுவால் முதன் முதலில் கழகத் தலைவராக கலைஞர் அவர்கள் தேர்வு செய்யப்பட்டார்.

7.7.1974 5வது பொதுக்குழுவிலும், 18.6.1978இல் 6வது பொதுக்குழுவிலும் 25.6.1983 7வது பொதுக்குழுவிலும் 2.2.1988 8வது பொதுக்குழுவிலும் 2.6.1992 9வது பொதுக்குழுவிலும் 27.7.1997 9வது பொதுக்குழுவிலும் 8.4.2000 11வது பொதுக்குழுவிலும் 27.12.2008 13வது பொதுக்குழுவிலும் 9.1.2015 14வது பொதுக்குழுவிலும் எனத் தொடர்ந்து 11 முறை கலைஞர் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணிபுரிந்து வந்தார் என்பதே வரலாறு கூறும் செய்திகளாகும்.

பலர் வரலாற்றை உருப்போடுவார்கள். ஆனால், ஒரு சிலர்தாம் வரலாற்றை உருவாக்குகிறார்கள்!

---

### இராமநாதபுரம் – கடலாடி – கூவர் கூட்டம் – வெற்றிமாலை கண்மாயில் டிராக்டர் விபத்தில்

# உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கு - தலா ரூ.3 லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை. 27-

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், கூவர் கூட்டம் கிராமத்தி லுள்ள வெற்றிமாலை கண்மாயில் டிராக்டர் கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி -தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், ஆப்பனூர் குரூப், கூவர் கூட்டம் கிராமத்தைச் சேர்ந்த 15 நபர்கள் 25.07.2025 அன்று பிற்பகல் ரேஷன் கடையில் பொருட்கள் வாங்கிக் கொண்டு TN73 Y 6910 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரில், வெற்றிமாலை கண்மாய் கரையருகில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக டிராக்டர் கண்மாய் கரையில் உள்ள சாலையில் இருந்து கண்மாய்க்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த திருமதி. பொன்னம்மாள் (வயது 68) க/பெ.பழனி, திருமதி.ராக்கி (வயது 62) க/பெ.நடராஜன் மற்றும் திருமதி.முனி யம்மாள் (வயது 55) க/பெ.கருப்பசாமி ஆகிய மூன்று பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 8 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

# இரயில்வே விபத்துகளைத் தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் மரு. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 27-

கடந்த ஐந்து ஆண்டுகளில் இரயில் விபத்துகள் அதிகரித்துள்ளது உண்மையா? அப்படி இருப்பின் ஐந்தாண்டுகளில் நடைபெற்ற விபத்துகள் பற்றிய விவரங்களை அளிக்கவும்.

மேலும், இவ்விபத்துகள் நடைபெற்றதற்கான முதன்மையான காரணங்கள் என்ன?

இவ்விபத்துகளில் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தோரது குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா?

இதுவரை நடந்த விபத்துகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றிய ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா?

சமர்ப்பிக்கப்பட்டிருக்கையில், எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற இரயில் விபத்துகள் ஏற்படாமல் தடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது பரிந்துரைக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., மரு. கனிமொழி என்.வி.என். சோமு அவர்கள் கேள்வி எழுப்பி இருந்தார்.

**இக்கேள்விகளுக்கு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் அளித்துள்ள பதில் வருமாறு:**

பயணிகளின் பாதுகாப்பை பிரதான இலக்காகக் கொண்டு இந்திய இரயில்வே செயல்பட்டு வரு கிறது. இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளால் 2004 14 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 171 விபத்துகள் ஏற்பட்ட நிலையிலிருந்து 2024-25ம் ஆண்டில் 31 என்ற அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

இரயில்வே தண்டவாளம் மற்றும் இரயில் பெட்டிகளில் குறைபாடு, உபகரணங்கள் செயலிழப்பு மற்றும் மனிதத் தவறுகளால் பிரதான விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன.

2020-21ஆம் ஆண்டு முதல் 2024-25ம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் இது வரை ரூ. 39.83 கோடி இரயில் விபத்து களால் பாதிக்கப்பட்டோரது குடும்பத்தினருக்கு கருணைத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இழப்பீட்டுத் தொகையாக கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 30.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இரயில்வே துறை சார்ந்த பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கு 2024-25ம் ஆண்டிற்கு திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ. 1 இலட்சத்து 14 ஆயிரத்து 22 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-26ம் நிதியாண்டில் ரூ. 1 இலட்சத்து 16 ஆயிரத்து 470 கோடி செலவிடப்படலாம் என கணிக்கப்பட்டுளள்து.

30.06.2025 வரை 6,635 இரயில்வே நிலையங்களில் இன்டர்லாக்கிங் பொறிமுறை பாதுகாப்பு வசதிகள் மற்றும் அதற்கான சிக்னல்கள் அமைக்கப்பட்டு மனிதத் தவறுகளால் ஏற்படும் விபத்துகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

11,096 லெவல் கிராசிங்குகளில் இன்டர்லாக்கிங் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன.

30.06.2025 வரை 6,640 இரயில்வே நிலையங்களில் மின்சார சுற்றுகள் மூலம் தண்டவாள கண்காணிப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. உச்சபட்ச பாதுகாப்பு தொழில்நுட்பமான “கவச்” அம்சம் 1548 கி.மீ. தொலைவிற்குஏற்படுத்தப்பட்டுள்ளது.

கட்டாய கண்காணிப்பு நடவடிக்கைகள், சிக்னல் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளை இயக்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டுளளது.

பனிமூட்டமான காலங்களில் பார்வை சிரமங்கள் ஏற்படும்போதும் எளிதில் புலப்படும் வகையில் 2 நிலைகளுக்கு முன்பு தொடங்கிய மேல்நிலை மின்சார கம்பங்களில் ஒளி பிரதிபலிப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தொலைவில் உள்ள சிக்னல் மற்றும் லெவல் கிராசிங்குகளை எளிதில் அடையாளம் காண உதவும் வகையில் இரயில் ஓட்டுனர்களுக்கு தடங்காட்டி (GPS) வசதியுடன் கூடிய பனிக்கால பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.அனைத்து ஆளில்லா லெவல் கிராசிங்குகளும் அகல இரயில் பாதைகளில் 2019ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்பாக அகற்றப்பட்டுள்ளன.



இரயில் பெட்டிகள் மற்றும் தண்டவாளங்கள் இணைய வழியிலும் இரயில்வே ஊழியர்கள் மூலமாகவும் கண்காணிக்கப்பட்டு வெல்டிங் மற்றும் தண்டவாள குறைபாடுகள் முன்கூட்டியே கண்டறிய வசதிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

காவல்துறை மாநிலப்பட்டியலில் வருவதால் இரயில்வே காவல்துறையினருடன் ஒருங்கிணைந்து 2020 24 ஆண்டு வரையில் அடையாளம் தெரியாத பொருட்களை தண்டவாளத்தில் வைத்ததற்காக 277 வழக்குகள் பதியப்பட்டு 348 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரயில்வே பாதுகாப்பு கமிட்டி ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு இது போன்ற அடையாளம் தெரியாத பொருட்களை தண்டவாளத்தில் வைக்கும் நிகழ்வுகளை தடுக்க மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டுள்ளன.

ஒன்றிய மற்றும் மாநில புலனாய்வு அமைப்புகள் முடுக்கி விடப்பட்டு காவல்துறையினருடன் ஒருங்கிணைந்து இரயில்வே தண்டவாளங்களை சேதப்படுத்திடும் முயற்சிகளை தடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுளளது. விபத்து ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகளில் சிறப்பு குழுக்கள் நியமிக்க ப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் பதிலளித்துள்ளார்.

---






பெருநகர சென்னை மாநகராட்சி 128வது வார்டுக்குட்பட்ட காமராஜர் சாலையில் இயங்கிவரும் மாநகராட்சி உணவகத்தில் ஆய்வு மேற்கொண்டு உணவின் தரம் மற்றும் ஊழியர்களின் குறைகளை மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் கேட்டறிந்தார். உடன் ஊழியர்கள் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. இராமமூர்த்தி
ஜூலை 27 (2013)



இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் இருபது ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அரும்பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.